**செய்தி வெளியீடு எண்: 956** **நாள்: 27.12.2018**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (27.12.2018) சென்னையில் நடைபெற்ற இந்திய அறுவை சிகிச்சை நிபுணர்கள் கூட்டமைப்பின் 78–ஆம் ஆண்டு தேசிய கருத்தரங்கை துவக்கி வைத்து ஆற்றிய உரை**

அனைவருக்கும் வணக்கம்.

இந்திய அறுவை சிகிச்சை மருத்துவர்களின் சங்கம் நடத்தும் ASICON 2018-Chennai 78–வது ஆண்டு தேசிய கருத்தரங்கின் துவக்க விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் கலந்து கொண்டுள்ள

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர்
திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற
மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்
திரு. காமராஜ் அவர்களே!

இவ்விழாவிலே வரவேற்புரை ஆற்றிய
டாக்டர் ரத்தினசாமி அவர்களே!

செயலாளர் டாக்டர்.எபினேஷ் பென்சம் அவர்களே!

தலைமையுரை ஆற்றிய டாக்டர்.திலிப் எஸ். கோடே அவர்களே!

வாழ்த்துரை வழங்கிய துணைத் தலைவர்
டாக்டர்.அரவிந்த் குமார் அவர்களே!

மற்றும் டாக்டர் சிவா கே.மிஸ்ரா அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள டாக்டர் கே.விநாயக் செந்தில் அவர்களே!

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற
பல்வேறு நாடுகளிலிருந்து வருகை புரிந்து கருத்தரங்கில் கலந்து கொண்டுள்ள அறுவை சிகிச்சை நிபுணர்களே!

இந்திய அறுவை சிகிச்சை மருத்துவ சங்க நிர்வாகிகளே!
பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

I welcome all the surgeons who have come from all over India, SAARC countries and other countries for the prestigious conference. I hope you all have a pleasant stay at Chennai and excellent discussions in this Conference.

இந்தியாவிலே மருத்துவ சிகிச்சைத் துறையில் தமிழ்நாடுதான் முதன்மை இடத்தை வகிக்கின்றது. இந்தக் கருத்தரங்கில் ஒருவருக்கொருவர் இடையே நடைபெறும் கலந்துரையாடல்கள், மருத்துவத் துறையில் புதிய கண்டுபிடிப்புகள் மேற்கொள்வதற்கும், நாடு முழுவதும் ஒரே சீரான, தரமான மருத்துவ சேவை வழங்குவதற்கும் அடிகோலாக அமையும் என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த அமைப்பிற்கு நாடு முழுவதும் 22 மாநிலங்களில் கிளைகளும், பல்வேறு நகரங்களில் பிரிவு அமைப்புகளும் இருப்பதை அறிந்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த தேசிய மருத்துவ மாநாடு 25 ஆண்டுகளுக்குப் பின் சென்னையில் நடப்பது தமிழ்நாட்டிற்கு கிடைத்த பெருமையாகும்.

The Associations of surgeons of India was started in the year 1938 with its headquarters at Chennai. The Association has ensured that the latest modern surgical technologies are taken to everyone in our country. I am happy to note that more than 18,000 surgeons in the association are serving our people to relieve them from pain and sufferings in a selfless and committed way. I hope you share the latest developments and your valuable experiences in the Conference so that the surgeons become more skilled and effective.

Chennai is fast developing as a medical tourism hub and this Conference would add pace towards this objective. Honourable

Amma's Government always provides excellent medical services to the people of Tamil Nadu and it has established health and medical care facilities all over the State. My Government has taken various policy decisions towards the same so that Tamil Nadu becomes a numero-uno State for providing health care facilities not only for our countrymen but also for everyone all over the world.

மருத்துவத் துறையில் உயரிய தொழில்நுட்பமாக கருதப்படும் அறுவை சிகிச்சை இன்று சர்வசாதாரணமாக உலகெங்கும் மேற்கொள்ளப்பட்டாலும் கூட, பல நூற்றாண்டு காலத்தின் தொடர் போராட்டத்தின் மூலம் தான் மனிதனால் அறுவை சிகிச்சை மருத்துவத்தில் இன்றைய வளர்ச்சியை எட்ட முடிந்தது.

மருந்துகளால் குணப்படுத்த முடியாத உடலின் பாதிப்படைந்த பகுதிகளை, அறுவை சிகிச்சை மூலம் உயிரிழப்பை ஏற்படுத்தாமல் எப்படி குணப்படுத்துவது, அதற்காக உடலில் கீறல்களை எப்படி உண்டாக்கி, செப்பனிட்டு பின்பு கிழிந்த உடலை மீண்டும் எப்படி தைப்பது என்பதை உலகிற்கு முதன் முதலாக தெளிவான வழிகாட்டுதலுடன் விளக்கிக் கூறி, செய்தும் காட்டியவர், அறுவை சிகிச்சைத் துறையின் தந்தை என்று அழைக்கப்படும் **சுஸ்ருதர்** என்பதை நான் இங்கு பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். இவர் தான் உலகின் முதல் அறுவை சிகிச்சை கலைக் களஞ்சியமான ''சுஸ்ருத சம்ஹிதையை'' என்ற நூலை மனித சமுதாயத்திற்கு வழங்கியவர். இவர் அறுவை சிகிச்சைத் துறையில் மாமேதையாக விளங்கினார். இவர்தான் மயக்க மருந்து அறிவியல் மற்றும் பிளாஸ்டிக் சர்ஜரியின் தந்தையாக போற்றப்படுகின்றார். மருத்துவத்தில் உலகிற்கே வழிகாட்டியாக திகழ்ந்தது நமது நாடு தான் என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமிதம் கொள்கிறேன். மகப்பேறு இயற்கையான முறையில் நடைபெற முடியாத சந்தர்ப்பங்களில் அறுவை சிகிச்சையின் வாயிலாக குழந்தையை வெளியே எடுக்கலாம் என்பதை செய்தவரும் இவரே. இதை நாம் உலகளவில் எடுத்துரைத்து பெருமை கொள்ள வேண்டும்.

இன்றைய காலத்தில் உலகளவில் மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை முறையில் பரிணாம வளர்ச்சி ஏற்பட்டு, இருதய அறுவை சிகிச்சை, எலும்பு மூட்டு அறுவை சிகிச்சை என மனித உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்புக்கும் ஏற்படும்

பாதிப்புகளை அறுவை சிகிச்சை மூலம் நோயாளிகளுக்கு எந்தவிதமான பாதிப்புமின்றி சுலபமாக சரிசெய்யப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் உள்ள மருத்துவர்களாகிய நீங்களும் இந்த அறுவை சிகிச்சை செய்யும் முறையில் பல்வேறு சாதனை புரிந்து வருகிறீர்கள். அதற்கு ஒரு நிகழ்வினை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அபிஷேக் பிரசாத் என்ற ஒரு கிடார் இசைக் கலைஞர் அதிக அளவில் கிடாரில் பயிற்சி செய்ததன் விளைவாக அவரது இடதுகை நடுவிரல், மோதிர விரல், சுண்டு விரல் ஆகியவை செயல்படாமல் போனது. உடனே அவர் ஒரு நரம்பியல் வல்லுநரை அணுகினார். மருத்துவ வல்லுநரும் அபிஷேக் பிரசாத்தை பரிசோதனை செய்து, அவர் “டிஸ்டோனியா’’ என்ற நோயால் பாதிக்கப்பட்டதாக கூறினார். இதனை அறுவை சிகிச்சையின் மூலம் சரிசெய்யலாம் என்றும் கூறினார். அறுவை சிகிச்சையின்போது மூளையின் சில மின் சுற்றுகள் எரிக்கப்பட்டன. இந்நிலையால் வலி மிகுந்த பிடிப்புகள், விரல்கள் முறுக்கிக் கொள்வது, மீண்டும் அசைவு போன்றவை ஏற்பட்டது.

**ஒவ்வொரு சுற்றினை எரிக்கும்போதும், டாக்டர்கள் அபிஷேக் பிரசாத்தை கிடார் வாசிக்கச் சொன்னார்கள். ஆறாவது முறை எரிக்கும்போதே, விரல்கள் திறந்து விட்டன. அறுவை சிகிச்சை மேசையிலேயே, தான் இயல்பு நிலைக்கு வந்துவிட்டதாக கூறினார் அந்த கிடார் இசைக் கலைஞர்.**

அறுவை சிகிச்சைக்குப் பிறகு தன்னால் நன்கு வாசிக்க முடிவதாக கூறினார் அந்த கிடார் கலைஞர் அபிஷேக் பிரசாத் அவர்கள்.

சிகிச்சை நடக்கும்போது நோயாளி சுய நினைவிலேயே இருந்தார். அறுவை சிகிச்சை நடைபெறுவதை தனது கண்களால் பார்த்துக் கொண்டே இருந்தார். இது மாதிரியான மூளை மின்சுற்று அறுவை சிகிச்சை இந்தியாவிலேயே செய்யப்படுவது ஒரு மைல்கல். இந்த சாதனையை நிகழ்த்தியவர் இந்தியாவைச் சார்ந்த ஒரு அறுவை சிகிச்சை நிபுணர்தான் என்பதை அறியும்போது நமக்கெல்லாம் மிகவும் பெருமையாக உள்ளது.

தமிழ்நாட்டில் அரசாங்க மருத்துவமனையில் இரண்டு கைகளையும் இழந்த ஒருவருக்கு மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டுள்ளது. அதேபோல் தமிழ்நாட்டில் 3 அரசு மருத்துவமனைகளில் 16 இருதய மாற்று அறுவை சிகிச்சைகளும்

வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது என்பதை இங்கே பெருமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல், தற்போது உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் அதிக அளவில் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன. உடல் உறுப்பு தானம் வழங்கும் மாநிலங்களில் தமிழ்நாடு முதல் மாநிலமாக தொடர்ந்து 4 முறை விருதுகளை பெற்றுள்ளது.

இது வரை இதயம் பழுதடைந்தவர்களை, சிறுநீரகம் பழுதடைந்தவர்களை, நுரையீரல் பழுதடைந்தவர்களை உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மூலம் வாழ வைத்திருக்கிறது மருத்துவத் துறை. ஆனால் கர்ப்பப்பை இல்லாதவர்களுக்கும், பழுதடைந்தவர்களுக்கும் தீர்வு காணப்படவில்லை. இப்போது அதற்கும் தீர்வு கண்டு சாதித்து காட்டியிருக்கிறது, புனேவை சேர்ந்த ஒரு மருத்துவமனையைச் சார்ந்த மருத்துவக் குழு. சென்ற வருடம் கர்ப்பப்பை மாற்று சிகிச்சை செய்து ஒரு பெண்ணுக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது, இது ஒரு வரலாற்று சாதனை.

சீரான சுகாதார பாதுகாப்பு அளிப்பதை உறுதி செய்யும் நோக்கில் பல முன்னோடி செயல் திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்களாலும், மாண்புமிகு அம்மாவின் அரசாலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

- ❖ தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம், தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணைக்குழு ஆகியவை சிறந்த மருத்துவ சேவையை அளித்து வருகிறது. மேலும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம், வளர் இளம் பெண்களுக்கான சுகாதாரத் திட்டம், பிரசவ உடனாளர் திட்டம், அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம், அம்மா ஆரோக்கியத் திட்டம், அம்மா முழு உடல் பரிசோதனை, அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம், அம்மா மருந்தகம் போன்ற பல முன்னோடி திட்டங்களையும் முதன் முதலாக செயல்படுத்திய பெருமை தமிழ்நாட்டிற்கே உள்ளது.
- ❖ மாண்புமிகு அம்மா அவர்களாலும், அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு அம்மாவின் அரசாலும் மேற்கொள்ளப்பட்ட இடைவிடாத முயற்சியின் காரணமாக

மதுரை மாவட்டம் தோப்பூரில் ஆயிரத்து **500** கோடி ரூபாய் செலவில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்பட உள்ளது.

- ❖ கரூரில் ஒரு புதிய அரசு மருத்துவக் கல்லூரியும், விருதுநகரில் ஒரு புதிய பல் மருத்துவக் கல்லூரியும் தொடங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.
- ❖ **முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றுக்கு குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த காப்பீட்டுத் தொகை 2 லட்சம் ரூபாயிலிருந்து 5 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இது வரை 27.68 லட்சம் நோயாளிகளுக்கு 5,420 கோடி ரூபாய் செலவில் பல்வேறு சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன.**
- ❖ உயர்தர மருத்துவ சேவைகளை வழங்குவதில் மட்டுமல்லாது, மிகச் சிறந்த மனித வளம் மற்றும் கட்டமைப்பை ஏற்படுத்தித் தருவதிலும், தமிழ்நாடு இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரி மாநிலமாக திகழ்ந்து வருகிற காரணத்தால், தமிழ்நாடு இந்தியாவின் மருத்துவ தலைநகரமாக விளங்குகிறது.

**“சமூக பொருளாதார பின்னணி எதுவாக இருந்தாலும், அதனை கருத்தில் கொள்ளாமல், மாநிலத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் மருத்துவ சிகிச்சை தொடர்பான அனைத்து நடைமுறைகள், தொழில் நுட்பங்கள், மருத்துவத் திறன் செயல்பாடுகள் ஆகியவற்றை கிடைக்கச் செய்வதே எனது நோக்கம் ஆகும்” என்றார் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.**

**அது போல் We are for Service** என்பது தான் உங்கள் அமைப்பின் குறிக்கோள் என கேள்விப்பட்டேன். பொருளாதார ஏற்றத் தாழ்வை பார்க்காமல், மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியதுபோல் செயல்பட்டு, மருத்துவத் துறையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய தொழில்நுட்ப முறைகள் கடைக்கோடி கிராமத்து மக்களையும் சென்றடைவதற்கு அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மருத்துவர்களாகிய நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த கருத்தரங்கில் கலந்து கொண்ட இந்தியா உள்ளிட்ட அனைத்து நாடுகளைச் சேர்ந்த அறுவை சிகிச்சை மருத்துவ நிபுணர்களுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

I thank the organisers of the Conference for inviting me and hope this Conference would benefit all those who are participating in it. I also sincerely wish that the outcomes to this Conference would benefit the humanity as a whole.

Thank you.

அனைவருக்கும் வணக்கம்! நன்றி!

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

* * * * *